பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 15] சென்னை: தை 22 (5—2—68) திங்கள் ★ வெளியூர்: தை 23 (6-2—68) செவ்வாய் [இதழ்: 194

திகைக்கிறது டெல்லி!

"மொழிக் கொள்கையில் தி.மு.கழகம் உறுதியோடு நிற்கும்.

"தமிழக அரசின் இந்தி ஒழிப்புத் தீர்மானத்தைக் கண்டு டெல்லி அரசு திகைத்துப்போய் இருக்கிறது; ஆகவே இந்தி ஒழிப்புத் தீர்மானத்தை அலட்சியம் செய்ய அவர்களால் முடியாது!

"தமிழகத்தில் அறிவு ஆட்சி நடப்பதால்தான் மாணவர்கள் போராட்டம் அமைதியாக நடந்து முடிந்தது."

--க. அன்பழகன்
(சிறுநாகலூர் கூட்டத்தில்)

மாணவர்களுக்கு

அறிஞர் அண்ணாவின் உருக்கமிக்க வேண்டுகோள்

சென்னை, பிப். 5—

'மாணவர்களிடையே மூண்டுள்ள கொதிப்புப் பற்றி வருத்தத்துடன், பெருந்தகையாளர் அருளப்பர் குறிப்பிட்டார்; 'தமிழக மாணவர்களின் இயற்கையான இயல்பு இது' என்று யாரும் எண்ணவேண்டாம்.

"கடும் வேகமாகக் காற்று அடித்தால், செடிகளில் பூத்துக் குலுங்கும் மலர்கள் உதிர்ந்து வீழ்வது, மலர்களின் குற்றமல்ல—அது, காற்றின் குற்றமாகும்! மாணவர் நிலையும் அது தான்! 'காற்று அடித்தால் மலர்கள் உதிர்ந்துவிடுமே' என்று எண்ணாமல், எங்கிருந்தோ மாணவர்கள் பக்கம் திருப்பப்பட்ட காற்றின் விளைவே மாணவர்களின் கிளர்ச்சிகள்!

"இதை நான் சொல்லுவதால், தங்கள் நிலை, 'இயற்கைக்கு அப்பாற்பட்டது' என்று மாணவர்கள் எண்ணிவிட வேண்டாம்.

"பொறுப்பு உணர்ச்சி மிக்கவர்கள் தமிழக மாணவர்கள்—கல்வியில் அதிக ஈடுபாடு உள்ளவர்கள் என்பதை நான் அறிவேன்.

"காற்று வீசும்போது, நாணல், வளைந்து மீண்டும் நிமிர்ந்து நிற்பதைப்போல், மாணவர்கள், 'கடும் காற்று வீசும்போது சிறிதளவு தாழ்ந்தும், காற்று அடங்கியதும் நிமிர்ந்தும் நிற்க வேண்டும்—கல்வியில் ஈடுபட வேண்டும்' என்று நான் பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

"பல ஆண்டுகளாக நான் கேள்விக் குறியாக இருந்தவன்; இப்போது ஆச்சரியக் குறியாக இருப்பவன்; ஆகவே மாணவர்களின் உள்ளத்தில் கொழுந்துவிட்டு எரியும் உரிமை உணர்ச்சியை நான் மனதார வரவேற்கிறேன்; அதற்காக என்னால் இயன்ற அளவில் பாடுபடவும் தயாராக இருக்கிறேன்.

"உங்களுக்காக (மாணவர்களுக்காக)ப் பாடுபட ஒரு அண்ணன் இருக்கிறான்; ஒருபோதும் இந்த அண்ணன் உங்களைக் கைவிடமாட்டான் என்பதை உறுதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்."

(மயிலை—சாந்தோம் தூய தோமையர் பள்ளியின் புதிய கட்டடத் திறப்பு விழாவில்)

'மொழிப் பிரச்சினையால் நாடு சிதறுண்டுவிடும்'

குடியரசுத் துணைத் தலைவர் எச்சரிக்கை

ஜலந்தர், பிப் 5—

மொழிப் பிரச்சினை குறித்து, நாட்டில் நடைபெற்று வரும் கிளர்ச்சிகள் தனக்குக் கவலையளித்திருப்பதாக இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு. வி. வி. கிரி குறிப்பிட்டார்.

"இப்பிரச்சினையை சரிவர அணுகாவிட்டால், மொழித் தகராறு ஏற்படுவதுடன், நாடே சிறு சிறு துண்டுகளாக உடைந்துவிடும்" என்றும் அவர் சொன்னார்.

"மொழிப் பிரச்சினையை அரசியல் தலைவர்கள் சுமுகமாகத் தீர்க்கத் தவறிவிடுவார்களானால், நாடே துண்டு துண்டாகப் பிரிந்துபோகும்" என்றும் அவர் எச்சரித்தார்.

"அடிப்படை உரிமைகள், பொருளாதாரச் சமத்துவம், உணவு, உறைவிடம் இவைகள் ஒவ்வொருவருக்கும் கிடைக்க வேண்டும் என்பதைத்தான் அரசியல் சட்டத்தின் அடிப்படை உரிமைகள் தெரிவிக்கின்றன; ஆனால் இவைகளை நாம் பெற்றிருக்கிறோமா என்றும் அவர் கேட்டார்.

18,018 பேருக்கு இந்தியக்குடியுரிமை

கொழும்பு, பிப். 5—

கடந்த சனவரித் திங்களில் இந்திய வழிவந்தவர்களைச் சார்ந்த 1,062 பேர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப்பட்டிருப்பதாக இந்தியத் தூதர் அறிவித்தார்.

1964-ம் ஆண்டு அக்டோபரில் சாஸ்திரி உடன்பாட்டிற்குப்பின் இதுவரை 18,018 பேர்களுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கப்பட்டிருப்பதாகவும் தெரிகிறது.

இவர்களில் 4,014 பேர்கள் தாங்களாகவே இந்தியாவிற்கு திரும்பியிருப்பதாக அறியப்படுகிறது.

சொல்வது தமிழனா?-- சோற்றுத் துருத்தியா?

"உலகில் தமிழன் வீரம் நான்காம்தர வீரம்தான்!

"தமிழுக்கும் வடமொழிக்கும் ஒரேமாதிரி எழுத்து வடிவம்தான் இருந்தது!"

—சினிமாவுக்குத் தமிழ்ப் பாட்டு எழுதிப் பிழைக்கும் புதுக்காங்கிரசுத் தமிழ்த் துரோகி ஒருவர்

பத்திரப் பதிவுத் துறை எழுத்தர்களுக்குப் பதவி உயர்வு

நீண்டகாலமாக நிலவிய குறைபாடு நீங்கிவிட்டது

தமிழக அரசின் உத்தரவு உடனடியாக அமுல்

மதுரை, பிப். 5—

பத்திரப் பதிவுத் துறையைச் சேர்ந்த மாநிலத்தில் உள்ள 215 'லோயர் டிவிஷன் குமாஸ்தா'க்கள் (எல். டி. சி) அனைவரையும் 'அப்பர் டிவிஷன்' குமாஸ்தாக்களாக (யு. டி. சி.) பதவி உயர்த்தி தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

இந்த உத்தரவு பிப்ரவரி 1-ந் தேதிமுதல் அமுலுக்கு வந்துவிட்டது.

இந்த இலாகாவின் ஊழியர்களுக்கு நீண்ட காலமாக இருந்து வந்த குறை இந்த உத்தரவின்மூலமாக நீக்கப்பட்டுள்ளது.

சில நாட்களுக்குமுன்பு, சங்கத்தின் மாநில மாநாடு நடைபெற்றபோது, நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஒன்றில், 'லோயர் டிவிஷன் குமாஸ்தாக்'களை 'அப்பர் டிவிஷன் குமாஸ்தா'க்களாகப் பதவி உயர்த்த வேண்டும் என்று கோரப்பட்டிருந்தது.

அறிஞர் அண்ணாவைச் சந்திக்குமாறு கட்டளை

பீகார் முன்னாள் முதல்வருக்கு பாரதீயக் கிரந்தித் தளச் செயற்குழு யோசனை

சென்னைக்கு விரைகிறார் மகாமாய பிரசாத்—பொதுப் பிரச்சினைகள்மீது விவாதம் நடத்துவார்

புதுடில்லி, பிப். 5—

அண்மையில் பதவி துறந்த பீகார் மாநில முன்னாள் முதலமைச்சர் மகாமாய பிரசாத், தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களைச் சந்திப்பார்.

நாட்டை எதிர்நோக்கியுள்ள பொதுவான பிரச்சினைகளுடன்—குறிப்பாக மொழிப் பிரச்சினை குறித்து அவர்கள் விவாதிப்பார்கள்.

பாரதீயக் கிரந்தித் தளத்தின் தேசீயச் செயற்குழு, தமிழக முதலமைச்சரைச் சந்திக்குமாறு பீகார் மாநில முன்னாள் முதலமைச்சருக்குக் கட்டளைபிறப்பித்திருக்கிறது.

விரைவில் மகாமாய பிரசாத், அறிஞர் அண்ணா அவர்களைச் சந்திக்க சென்னைக்கு வரவிருப்பதாகச் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

கேரள அரசின் திட்டம்

அனுமதியளிக்க மத்திய அரசு மறுத்துவிடும்

புதுடில்லி, பிப். 5—

"கொள்முதல் செய்யவும் உணவுப் பொருள்களை விநியோகம் செய்யவும் அரசுப் பற்றற்ற மக்கள் நலக் குழுக்களை அமைக்க வேண்டும்"

என்ற கேரள அரசின் திட்டத்திற்கு மத்திய அரசு அனுமதியளிக்க மறுத்துவிடும் எனத் தெரிகிறது.

அதிகாரப் பற்றற்றவர்களோடு சில அதிகாரிகளைச் சேர்த்து இது போன்ற குழுக்களை அமைக்க இதற்கு முன்பு கேரள அரசு ஒரு அவசரச் சட்டத்தையே பிறப்பிக்க விரும்பியது; ஆனால், சட்டமன்றத்தில் இதற்கான மசோதா கொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டாலும், இம்மசோதா மீது மத்திய அரசு தலையிட்டு, குடியரசுத் தலைவரின் அனுமதி கிடைக்காமல் செய்துவிடும் என்றும் தெரிகிறது.

அச்சுறுத்தல் அதிகமாகிறது!

புதிய காங்கிரசுத்தலைவரின் புதிய கண்டுபிடிப்பு!

கொச்சி, பிப். 5—

காங்கிரசல்லாத கட்சிகள் ஆளும் மாநிலங்களில் பொருளாதார வளர்ச்சி குன்றியிருக்கிறதாம்!

மக்களின் அடிப்படை உரிமைகளுக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கிறதாம்!

அடிப்படை உரிமைகளை மதிக்காத எந்த அரசும் மக்களால் அகற்றப்பட வேண்டுமாம்; இன்றேல், அந்த அரசுகளை அரசியல் சட்டப் பிரிவுகளைப் பயன்படுத்தி அகற்றிவிட வேண்டியிருக்குமாம்!

இவ்வாறெல்லாம், புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள காங்கிரசுத் தலைவர் நிஜலிங்கப்பா, கேரளக் காங்கிரசுக் கட்சிக் கூட்டத்தில் பேசுகையில் அச்சுறுத்தியிருக்கிறார்!

'கலெக்டர்' என்ற பதவிப் பெயர்

மாற்றப்படுவது பற்றிச் சிந்திக்குமாறு தமிழக முதலமைச்சர் கோரிக்கை

திருச்சி, பிப். 5—

இங்கு நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டில், 'கலெக்டர்' என்ற பதவியின் பெயரை மாற்றி வேறு பெயர் வைப்பதற்கான யோசனை கோரப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

மாவட்ட நிர்வாகத்தை நடத்தும் அதிகாரிக்கு, 'கலெக்டர்' என்று பெயரிட்டு அழைப்பது வாழ்க்கை நல சர்க்கார் நடைபெறும் இக்காலத்திற்குப் பழமையானது என்று அம்மாநாட்டில் தமிழக முதலமைச்சர் கருத்தறிவித்ததாகத் தெரிகிறது.

"வரி வசூலிப்பவராக மட்டுமல்லாமல் மாவட்ட வளர்ச்சிப் பணிகள் அனைத்தையும் அவர்கள் கவனிக்கவேண்டியிருப்பதாலும், அவர்களை, 'கலெக்டர்' என்று பெயரிட்டு அழைப்பது பொருத்தமாகாது" என்றும் அவர் சொன்னதாகத் தெரிகிறது.

"எனவே, 'கலெக்டர்' எனும் பெயரை மாற்ற வேண்டுமா என்பது பற்றியும், மாற்றுப் பெயர்களைப் பற்றியும் சிந்திக்குமாறு முதலமைச்சர் கேட்டுக்கொண்டார்.

தலைமையாசிரியர் பதவிக்குத் தமிழாசிரியர்கள்

நெல்லை நகராட்சி முடிவு

திருநெல்வேலி, பிப். 5—

"நெல்லை நகராட்சியின் உயர் நிலைப் பள்ளி — ஆரம்பப் பள்ளிகளின் தலைமையாசிரியர் பதவிகளுக்கு, தமிழாசிரியர்களை (அவர்கள் தகுதி பெற்றிருந்தால்) நியமிப்பதற்கு முதலிடம் தரவேண்டும்"

என்று, திருநெல்வேலி நகராட்சிக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

"இனிமேல் நகராட்சிப் பள்ளியின் மேற்பார்வையாளர் (சூப்பர் வைசர்), பி.டி. பட்டம் பெற்றவராக இருக்கவேண்டும்" என்று மற்றொரு தீர்மானம் நிறைவேறியிருக்கிறது.

நம்நாடு
ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எல்லு
திருவள்ளுவராண்டு 1999 தை 22 (5—2—68) திங்கள்

ஏற்பாட்டைக் கோர உரிமை ஏது?

'ரூபாய்க்கு ஒரு படி அரிசி' என்ற ஏற்பாட்டை, உணவுப் பங்கீடு செயலிலிருக்கின்ற சென்னை—கோவை ஆகிய இரண்டு நகரங்களிலும், இன்றையத் தமிழக அரசு முதன்முதலாகச் செயல் படுத்தியது; அதற்குப் பின்னர், சென்னையையும் கோவையையும் சுற்றியுள்ள பகுதிகளுக்கும் அத்திட்டம் விரிவுபடுத்தப்பட்டது.

இந்த ஒரு படி அரிசி ஏற்பாடு, 'குடும்ப அட்டைகள் தரப்பட்டிருக்கின்ற நகரங்களுக்கும் விரிவுபடுத்தப்படும்' என, அரசு அறிவித்திருந்தது. அவ்வறிவிப்பின்படி, மற்ற நகரங்களுக்கும் அத்திட்டத்தைச் செயலாற்றுவதில் காலதாமதம் ஏற்பட்டுள்ளது.

இந்தத் தாமதத்திற்குத் தக்க காரணம் இருக்கத்தான் செய்கிறது. எதிர்பார்த்ததற்கு மாறாக, விளைச்சலின் அளவு குறைந்திருக்கிறது. இதன் பலனாக, கொள்முதல் அளவையும் நன்கு ஆராய்ந்து வரையறை செய்ய வேண்டியதாக இருக்கிறது. இது தான் காலதாமதத்துக்குரிய காரணம்.

சிறிது காலந்தாழ்த்தப்பட்டிருப்பதைக் கண்டதும், 'ஏதாவது கிடைக்குமா கழக ஆட்சியைக் கண்டிக்க' என—வாய்க்கால் ஓரத்தில் வாடிக்கிடக்கின்ற கொக்கு போல் இருக்கின்ற காங்கிரசுக் கட்சியினர்—'எங்கே ஒரு படி அரிசி?' என ஊளையிட ஆரம்பித்துவிட்டனர். 'இப்படி ஊளையிடுவது மட்டும் போதாது' என்ற நினைப்பினாலோ என்னவோ—மதுரை நகர மன்றக் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த காங்கிரசு உறுப்பினர்கள் (ஒழுங்கு நடவடிக்கைக்குள்ளான காங்கிரசுக் கட்சியினர் உட்பட) சிலர், வெளிநடப்புச் செய்திருக்கின்றனர்.

ஒரு படி அரிசி ஏற்பாட்டை மதுரை நகரத்துக்கும் செயல் படுத்த வேண்டும் என இந்த நகராட்சி, தீர்மானம் ஒன்றின்மூலம் தமிழக அரசைக் கேட்டுக்கொண்டிருப்பதாகவும், அத்தீர்மானத்தை ஏற்று ஒரு படி அரிசி போடத் தமிழக அரசு தவறிவிட்டது என்றும், அதற்காகத் தங்கள் கண்டனத்தைத் தெரிவிக்கவே தாங்கள் கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்வதாகவும், வெளியேறிய காங்கிரசுக் கட்சியினர் சார்பில் கூறப்பட்டிருக்கிறது.

நகராட்சிக் கூட்டத்திலிருந்து வெளிநடப்புச் செய்வதற்கு, காங்கிரசுக் கட்சியினருக்கு உரிமை இருக்கிறது; அந்த உரிமையில் நாம் குறை காண்பதற்கு எதுவுமில்லை.

ஆனால், 'ஒரு படி அரிசி ஏற்பாட்டை மதுரை நகரத்துக்கு ஏன் செயல்படுத்தவில்லை?' எனக் கேட்கவோ, செயல்படுத்தாமைக்காக அரசாங்கத்தைக் கண்டிக்கவோ, 'இந்தக் காங்கிரசுக் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு உரிமை உண்டா' என்பதுதான் கேள்வி.

தமிழக அரசின் ஒரு படி அரிசி ஏற்பாட்டை, காங்கிரசுக் கட்சியினர் இன்றுவரை பாராட்டியதும் கிடையாது—வரவேற்றதும் கிடையாது. அதற்கு மாறாக, இந்த அரிசி ஏற்பாட்டை, 'புளுகுகிறான் புளுகுகிறான்—தி.மு.க. புளுகுகிறான்' என்றெல்லாம் முழக்கமிட்டுக் கொண்டிருந்தவர்கள்—இன்றும் முழங்கிக்கொண்டிருப்பவர்கள், இதே காங்கிரசுக்காரர்கள்தான்!

இது மட்டுமா? இந்த அரிசி ஏற்பாட்டைக் குறித்து, சென்னையில் நடைபெற்ற நாடாளுமன்ற இடைத்தேர்தலின்போது வெளியிட்டிருந்த சுவரொட்டிகளில் என்ன எழுதியிருந்தார்கள்? 'பாதி நொய் - பாதி பொய்' என்றுதானே அந்தச் சுவரொட்டிகளில்—அரசின் படி அரிசி ஏற்பாட்டை—கேலியைக் கலந்து கண்டித்திருந்தனர், இந்தக் காங்கிரசுக் கட்சியினர்!

அரசின் படி அரிசி ஏற்பாட்டை, கேலியும் கிண்டலும் செய்துகொண்டிருப்பதோடாவது காங்கிரசுக் கடசியினர் மனநிறைவு பெற்றனரா?—'இந்த ஒரு படி அரிசி ஏற்பாட்டுக்காக, நெல் விலையைக் கூடுதலாக்குவதற்கு மறுத்து ஏழை விவசாயிகள் வயிற்றில் இன்றைய அரசு அடித்துக்கொண்டிருக்கிறது' என ஒப்பாரி வைத்து, விவசாயிகளைக் கழக ஆட்சிக்கு எதிராக ஏவும் முயற்சியையும் மேற்கொண்டனர்! இன்றும் இதைத்தானே தொடர்ந்து செய்துகொண்டிருக்கின்றனர், காங்கிரசுக் கட்சியினர்!

தமிழக அரசின் படி அரிசி ஏற்பாட்டை, 'தவறானது' என்றும் 'நெல் உற்பத்தி செய்யும் விவசாயிகளை வதைப்பது' என்றும் குற்றஞ்சொல்லி வருகின்ற காங்கிரசுக் கட்சியினர், மேற்படி திட்டத்தை 'மதுரை நகரத்துக்கும் ஏன் செயல்படுத்தவில்லை' எனக் கேட்க வெட்கப்பட வேண்டும்! அப்படிக் கேட்பதற்குக் காங்கிரசுக் கட்சியினருக்கு ஏது உரிமை?

அரசின் படி அரிசி ஏற்பாட்டை, 'தேவையானது—நியாயமானது' எனத் தீர்மானித்துக் கொண்டிருக்கின்றவர்கள்தான், அக்கேள்வியைக் கேட்பது நியாயம்.

ஒரு படி அரிசி ஏற்பாட்டினால் ஏற்படுகின்ற இழப்பை வரிப்பணத்திலிருந்து ஈடு செய்கின்ற காரணத்தால், 'தமிழகத்தின் தொழில் வளர்ச்சிக்குப் போதிய பணம் செலவிட இன்றைய அரசால் முடியவில்லை' என்ற பழிச் சொல்லை இன்றும் கூறிக்கொண்டிருக்கின்றவர்கள் இதே காங்கிரசுக்காரர்கள்தானே?

'படி அரிசி ஏற்பாடு பயனற்றது' எனக் கூறிக்கொண்டிருக்கின்ற அதே வாயால், 'மேற்படி ஏற்பாட்டை ஏன் விரிவுபடுத்தவில்லை—பிடி சாபம்' எனக் கொக்கரிக்கின்ற இந்தக் காங்கிரசுக் கட்சியினரின் அறிவை எதற்கு ஒப்பிடுவது?

அரசியல் கட்சிப் பகையை வெளிப்படுத்திக் கொள்ளுவதற்கும் ஒரு முறையில்லையா? ஒரு வரையறை இல்லையா?

படி அரிசி ஏற்பாடு விரிவுபடுத்தப்படுமா இல்லையா என்ற சந்தேகத்தைக் கிளப்பிக்கொண்டிருக்கின்ற காங்கிரசு ஜீவன்களுக்கு இவ்வேற்பாடு பற்றி முதலமைச்சர் அண்ணா அவர்கள் அறிவித்திருக்கின்ற நற்செய்தியைத் தருகின்றோம் :—

"எக்காரணத்தைக் கொண்டும் ரூபாய்க்குப் படி அரிசி வழங்கும் திட்டத்தைக் கைவிடப்போவதில்லை.

"மத்திய அரசின் உதவித் தொகை கிடைக்காது போனால்கூட, இத்திட்டத்தை விரிவுபடுத்துவதற்குத் தேவையான வழிவகைகளைத் தமிழக அரசு ஆராய்ந்து வருகிறது."

—கா. க.

முதலமைச்சர்கள் விரும்பினால் தலைமை அமைச்சர் தயாராம்!

சென்னை, பிப். 5—

சென்னையில் கப்பல் ஏறுவதற்கு முன் தலைமையமைச்சர் இந்திராவைச் சந்தித்த செய்தியாளர்கள், 'மொழிப் பிரச்சினை பற்றித் தங்கள் கருத்தென்ன?' எனக் கேட்டனர்

தலைமையமைச்சர் :— "இந்தப் பிரச்சினை குறித்து விவாதிக்க இது உரிய நேரமல்ல என்றே நான் கருதுகிறேன்; முதலமைச்சர்கள், தென்னக—வடநாட்டுத் தலைவர்கள் ஆகிய அனைவரும் ஒன்று கூடிப் பேசி, நாட்டின் ஒற்றுமையை நிலை நிறுத்தக் கூடியதும், இளைஞர்களுக்கு அதிக வேலை வாய்ப்புக்களை அளித்து நாட்டின் முன்னேற்றப் பணிகளில் அவர்களை ஈடுபடுத்தக்கூடியதுமான ஓர் ஏற்பாட்டை உருவாக்க வேண்டும்."

கேள்வி :—"இந்த முதலமைச்சர்கள் மாநாடு எப்போது நடக்கும்?"

பதில் :—"அனைவரும் விரும்பும் போது நடக்கும்."

கேள்வி :—"இந்த மாநாட்டைக் கூட்டுவதற்கான முயற்சியை நீங்கள் எடுத்துக்கொள்வீர்களா?"

பதில் :—"நான் முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டுமென்று அவர்கள் அனைவரும் விரும்பினால், அதற்கு நான் தயாராக இருக்கிறேன்."

உள்துறை அமைச்சர் கூறியிருக்கிறாராம்!

கேள்வி :— "நாடாளுமன்றத்தில் ஆட்சிமொழிச் சட்டமும் சட்டத்துடன் நிறைவேற்றப்பட்ட தீர்மானமும், இந்தி பேசாத மக்களுக்கு அதிகமான பளுவை ஏற்படுத்தியுள்ளது என்று சில காங்கிரசுத் தலைவர்களும்கூட கருத்துத் தெரிவித்துள்ளனர்; ஆகவே, இதுபற்றி மறு பரிசீலனை செய்யும் உத்தேசமுண்டா?"

பதில் :—"இதுபற்றி விவாதித்து, ஏதேனும் இடையூறு இருந்தால் தவிர்த்துக் கொள்ளலாம் என்று மக்களவை, மாநிலங்களவை ஆகிய இரு மன்றங்களிலும் உள்துறை அமைச்சர் கூறியிருக்கிறாரே!"

இதுபற்றி ஏதும் கூறுவதற்கில்லையாம்!

கேள்வி :—"தமிழகச் சட்டமன்றம் நிறைவேற்றிய தீர்மானம், சுய அதிகாரமுள்ள ஒரு சட்டமன்றம் நிறைவேற்றியுள்ள தீர்மானமாகும்; அது பற்றி உங்கள் கருத்து என்ன என்பதையும், அதுபற்றி நீங்கள் என்ன நடவடிக்கை எடுப்பதாகத் தீர்மானித்திருக்கிறீர்கள் என்பதையும் விளக்குவீர்களா?"

பதில் :—"இதுபற்றி நான் ஏதும் கூறுவதற்கில்லை."

தலைமையமைச்சர் கேட்டதும் முதலமைச்சர் சொன்னதும்!

சென்னை, பிப். 5—

அந்தமான் தீவுக்குச் செல்ல சென்னைத் துறைமுகத்தில் கப்பலேறிய தலைமையமைச்சர் இந்திராவை, கப்பல் தளத்தில் முதலமைச்சர் அண்ணா அவர்கள் பத்து நிமிட நேரம் தனியாகச் சந்தித்துப் பேசிவிட்டு வழியனுப்பி வைத்துத் திரும்பினார்; உடனே, செய்தியாளர்கள், முதலமைச்சரிடம், 'தலைமையமைச்சருடன் பேசியது என்ன?' என்று கேட்டனர்.

அண்ணா :—"மீண்டும் என்னைச் சந்தித்துப் பேசத் தலைமையமைச்சர் விருப்பம் தெரிவித்தார்; 'எப்போது வசதிப்படும்' என்று கேட்டார்; அந்தமான் சென்று திரும்பியதும் இதுபற்றி உங்களுக்குத் தெரிவிக்கிறேன் என்று கூறி, 'வருகின்ற மாதங்களில் நிதிநிலை அறிக்கை தயாரிப்பு—சட்டமன்றக் கூட்டம் ஆகியவை இருப்பதால், உங்களைச் சந்திக்க டெல்லி வருவதற்குப் போதிய நேரம் கிடைக்காது; ஆகவே, அந்தமானிலிருந்து நீங்கள் திரும்பியதும், வசதியான தேதி குறிப்பிட்டு உங்களுக்குத் தெரிவிக்கிறேன்; அந்தச் சந்திப்புகூட, 'அதிகாரப் பற்றற்ற முறையில்தான் இருக்கும்' என்று நான் கூறினேன்."

செய்தியாளர் :—"தமிழகச் சட்டமன்றத் தீர்மானம், மொழிப் பிரச்சினை ஆகியவை குறித்துத் தலைமையமைச்சருடன் பேசினீர்களா?"

அண்ணா :—"சட்டமன்றத் தீர்மானம் பற்றி நான் குறிப்பிடவில்லை; ஏனெனில், ஏற்கனவே அது மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருக்கிறது; வேறு எந்த முக்கிய பிரச்சினைகள் குறித்தும் நாங்கள் பேசவில்லை."

'பரிதாபம் கலந்த பரிவு' பாராட்டு அல்ல!

சென்னை, பிப். 5—

"தமிழகத்தில் கல்விக்காக ஆண்டொன்றுக்கு ரூ. 45-கோடி செலவிடப்படுகின்றது; கல்வி கற்றவர்களின் எண்ணிக்கையோ 40-ஆக உள்ளது; 100-க்கு 60-பேர் இன்னும் எழுத்தறிவற்றவர்களாகவே இருக்கின்றனர்!

"உலகத்து நாடுகளெல்லாம் நம்மை மதிக்க வேண்டுமானால், கல்வித் துறையில் நாம் வேகமான முன்னேற்றம் அடைய வேண்டும். அத்தகைய முன்னேற்றம் இல்லாமல் நம்மை உலக நாட்டவரெல்லாம் பாராட்ட வேண்டுமென்று எதிர்பார்த்தால், அது, 'ஏதோ, போனால் போகிறது' என்று நம்மை மதிப்பதாகவே இருக்கும்!

"வருகின்ற வெளிநாட்டவரெல்லாம் நம்மைப் பாராட்டுகிறார்களே என்று எண்ணி, 'அவையெல்லாம் பாராட்டுகள்' என்று நம்பி நாம் ஏமாறுவது கூடாது! அவையெல்லாம், பரிதாபம் கலந்த பரிவே ஆகும்! 'நம் நிலையைக் கண்டு பரிவைத் தெரிவிக்கிறார்கள்' என்பதைத் தவிர அது பாராட்டு அல்ல!

நாட்டின் எதிர்காலத்தைப் பள்ளிகளில் காண்கின்றேன்!

"எந்தச் செல்வத்தைப் பெறுவதற்குக் காலதாமதமானாலும், கல்விச் செல்வத்தைப் பெறுவதற்குக் காலதாமதம் கூடாது! மாணவர்கள் எந்த அளவுக்கு இன்று கல்வியில் ஈடுபாடு கொள்கிறார்களோ, அந்த அளவுக்கு நாட்டின் கல்விச் செல்வம் பெருகும்!

"அணி அணியாக மாணவர்களும், மாணவிகளும் அறிவுச் செல்வத்தை நாடிப் பள்ளிகளுக்குச் சென்று வருகின்ற காட்சியினைக் காணும்போது, உள்ளத்தில் மகிழ்ச்சி ஏற்படுகின்றது. இந்தக் காட்சியைக் காணும்போது நாட்டின் எதிர்காலத்தையே நான் பள்ளிகளில் காண்கின்றேன்; அந்த எதிர்காலச் சிற்பிகளை உருவாக்குவதில் பள்ளிக்கூடங்கள் உறுதுணையாக இருக்கவேண்டும்.

கடமை உணர்ச்சிக்கு வாழ்த்து--வணக்கம்

"நாட்டை ஏற்றமடையச் செய்யும் கல்விச் செல்வத்தை நம் மாணவர்கள் பெறுகின்ற இப்பணியினை நிறைவேற்றித் தருகின்ற ஆசிரியர்களுக்கு என் வணக்கமும் வாழ்த்துக்களும்!

"பள்ளிகளில் நிலவுகின்ற அமைதி—கற்றுத் தரப்படுகின்ற கல்வி—அதைக் கற்றுத் தருகின்ற ஆசிரியர் மனதில் உள்ள நிம்மதி—இவற்றைப் பொறுத்தே கல்வியின் தரம் அமையும்!

"தாய் அன்பையும், தந்தையின் கடமையையும் செலுத்தி வருகிறார்கள் ஆசிரியர்கள்! இத்தனையையும் மலிவு விலையில் தந்துகொண்டிருக்கிறார்கள்! அவர்கள் கடமை உணர்ச்சியினை நான் பாராட்டுகிறேன்!"

--முதலமைச்சர் அண்ணா

(மயிலை—சாந்தோம் தூய தோமையர் பள்ளியின் புதிய கட்டடத் திறப்பு விழாவில்)

'இரு மொழிக் கொள்கையே சிக்கலைத் தீர்க்கும்'

டில்லிக்கு கே. சந்தானம் கூறும் யோசனை

சென்னை, பிப். 2—

"மொழிச் சிக்கலுக்குத் தீர்வு காண்பதற்குள்ள ஒரே வழி, மத்திய ஆட்சியில் ஆங்கிலமும் இந்தியும் காலவரையின்றி நீடிப்பதுதான்; இந்த இரு மொழிக் கொள்கையை நேர்மையாகவும் கண்டிப்பாகவும் அமுல்படுத்துவதன்மூலம்தான் மொழிச் சிக்கலுக்குச் தீர்வு காணமுடியும்"

என, திரு. கே. சந்தானம் யோசனை தெரிவித்தார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"இந்தி பேசும் மாநிலங்கள், 'இந்திதான் இந்தியாவின் ஒரே ஆட்சிமொழி' என்று வற்புறுத்தி வருகின்றன; இந்தி பேசாத மாநிலங்கள், 'ஆங்கிலம் மட்டுமே இந்தியாவின் ஆட்சிமொழி' என்று சொல்லி

(4-ம் பக்கம் பார்க்க)

தமிழக அரசு செய்தது சரியான முடிவு!

படையனுப்பினாலும் தமிழர்களைப் பணியவைக்க முடியாது

இந்தியைத் திணித்தால் உள்நாட்டுப் போர்தான் மூளும்

டெல்லிக்கு வங்காள நாளேட்டின் எச்சரிக்கை

கல்கத்தாவிலிருந்து வெளியாகும் ஆங்கில நாளேடான 'இந்துஸ்தான் ஸ்டாண்டர்டு' 21—1—68 இதழில், மொழித் தொடர்பாகத் தமிழக அரசு எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கையை வரவேற்றும், வடவரின் எத்தகைய நிர்ப்பந்தத்துக்கும் தமிழகம் பணிந்து கொடுக்காது என்பதை எடுத்துக்காட்டியும் எழுதியுள்ள தலையங்கம் வருமாறு :—

"இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களைத் தவிர்த்து மற்றவர்களுக்கான இந்தி வகுப்புகளை எல்லா உயர்நிலைப் பள்ளிகளிலும் கீக்கம் செய்து அண்மையில் தமிழக அரசு வெளியிட்ட உத்தரவானது, 'ஆத்திரக்கார இந்தி வெறியர்களை நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டும்' எனக் கூறுவதவர்களின் கூற்றை நியாயப்படுத்தி விட்டது!

தமிழ் மாநில அரசின் இந்த விரைப்புக்குக் காரணம், வட இந்திய மாநிலங்களில் இந்தி வெறிக் கும்பல்கள் நடத்திய வன்முறை வெறியாட்டங்களும், இந்தி வெறியர்களின் நிர்ப்பந்தத்துக்கும் பணிந்து ஆட்சி மொழிச் சட்டத்தில் மத்திய அரசு செய்த திருத்தமே ஆகும்.

திருத்தப்படாத ஆட்சிமொழி மசோதாவும்கூட, நாட்டின் பெரும்பான்மையினராக உள்ள இந்தி பேசாத மக்களைத் திருப்தி படுத்தவில்லை.

காங்கிரசானது அதில் திருத்தங்களைச் செய்து, அம்மக்களின் சங்கடங்களை அதிகரித்து, அவர்களது நியாயமான அச்சத்தை மேலும் அதிகரிக்கச் செய்தது; எனினும்—இதனால் தங்களின் நிலைகள் பாதிக்கப்பட்டிருந்தும் கூட—தென்னகத்து மக்கள், அண்மை நாட்களைவரை குறிப்பிடத்தக்க சகிப்புத்தன்மையைக் காட்டியுள்ளனர்.

இன்று அவர்களது பொறுமை நைந்துவிட்டதென்றால், தங்களது குரல் கேட்கும்படிச் செய்ய எதிர்த் தாக்குதல் ஒன்றே வழி என்று அவர்கள் நிர்மாணித்தாக்களைன்றால், அதற்காக அவர்களை நியாயப்படி யாரும் பழி கூறமுடியாது!

பழி முழுதும், இந்தி வெறியர்களினும், அவர்களது நிர்ப்பந்தத்துக்குப் பணிந்து மண்டியிட்ட மத்திய அரசையே சேரும்!

தமிழக அரசின் செயலுக்குக் குஞ்சு சொற்களால் கண்டனம் தெரிவிக்க வேண்டுமென்று இந்தி வெறியர்கள் துடிக்கக் கூடும்; ஆனால், அத்தகைய கண்டனம் அவர்களது நிலையை மேலும் உறுதிப்படுத்துவதாகவே இருக்கும்.

தமிழக அரசின் செயலுக்குத் தமிழக மக்களின் ஒருமித்த ஆதரவு உண்டு என்பதோடு, மொழிச் சிக்கலில் சீனம் கொண்டிருப்போர் தமிழக மக்கள மட்டுமல்ல—மைசூர் மாநிலத்தில் கடந்த கலவரங்களும், அதற்குமுன் ஆந்திரம் கண்ட ஆர்ப்பாட்டங்களும், இந்தி ஆதிக்க எதிர்ப்புணர்ச்சி இந்தியத் தீபகற்பம் முழுவதையும் அளாவியதாக உள்ளது என்பதைப் புலப்படுத்துவதாக உள்ளன.

இந்த அமைதியின்மையைத் தடுத்நிறுத்திவிட்டு—மொழிச் சிக்கல் எழுப்பியுள்ள குட்டிநாத்தனியை செய்து குளிர்ச்சி ஏற்படாமலேயே—நிகழ்ச்சிகளின் போக்கு 'இந்தியா தொடர்ந்து ஒரே நாடாக இயங்கமுடியாது' என்றதோர் நிலையை உருவாக்கும் என்பதற்கு இடமுண்டு.

இவையெல்லாம் முன்பே கூறப்பட்டுள்ளன; இப்போதும் அடிக்கடி கூறப்படுகின்றன; ஆனால், அண்மைக்கால நிகழ்ச்சிகள், இப்பிரச்சினைக்கு ஒரு அவசரத் தன்மையையும், தனி முக்கியத்துவத்தையும் அளித்துள்ளன; இதைப் புறக்கணித்துவிட முடியாது!

இந்தியா தைந்நடுமென்பது—என்றோலும், ஒரு நாள் அப்படி நேர்ந்துவிட்டால்—அது எத்தன் பயங்கரமானது என்பதை அறிய ஆய்வுகள் நடத்திக் கொண்டிருக்கும் ஒன்றுக இல்லை. சந்தித்துத் தீரவேண்டிய ஆக்கபூர்வமான செயல்கள் மூலம் நிரவு கண்டாக வேண்டிய உண்மை நிலைமைகளை அது ஆகிவிட்டது!

இந்த அபாயத்தை ஆயுதம் கொண்டு சமாளிப்பது என்பது, இயலாத ஒன்று!

இந்திக்காக வாதாடுகிற வாய் வீச்சுக்காரர் எவரேனும்வேண்டு மானால் அப்படிச் செல்லிக் கொண்டிருக்கலாம்!

இராணுவத்தை அனுப்பித் தமிழக மக்கள்மீது இந்தியைத் திணித்துவிட முடியாது! அந்த கையை முயற்சி எதுவும் உள்நாட்டுப் போரை மூட்டிவிடுவதாகவே இருக்கும்!

தென்னக மக்களின் அன்பைப் பெறுவதற்காக அவர்கள் கடைப்பிடிக்கச் செய்ய உள்ள ஒரே வழி, இந்திக்காரர்கள் இதுவரை இருந்ததைக் காட்டிலும் அதிக நிதானத்தோடு நடந்துகொள்வதொன்றே ஆகும்.

தென்னக மக்களின் உணர்ச்சிகளைப் பற்றிஎரியும்படிச் செய்யக்கூடிய ஆத்திரமூட்டும் பேச்சுக்களை ஒரு நாளும் இந்திக்காரர்கள் பேசலாகாது என்பதோடு, மொழிகளுக்கிடையே சம நிலை காண்பதில் நங்களுக்குள்ள உண்மையான அக்கறையைப் புலப்படுத்தியாக வேண்டும்.

மத்திய ஆட்சியாளர்கள், மொழிச் சட்டத்தை மறுபரிசீலனை செய்து, வெளிப்படையாகவே தெரிகின்ற தென்னக மக்களின் வசதிக் குறைவுகளையும் நீக்கியாக வேண்டும். அத்தகைய நல்லெண்ணபூர்வமான செயல் தென்னக மக்களின் கொதிப்பை அடக்கும் என்பதோடு, நங்கள் மக்களில் ஒரு சாராரது அதிதீவிர கோரிக்கை எதிர்த்திடவும் தென்னாலில அரசுகளுக்கு வழிசெய்யும்!"

முத்தப்பன்பட்டி தி. மு. கழகம்

முத்தப்பன்பட்டி தி. மு. கழக கிளைகளின் இடைதேர்தல் வட்டச் செயலாளர் உ. மா. கண்ணு சமியை ஆணையாளராக கொண்டு கடைபெற்றது; தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகிகள் :—

அவைத் தலைவர்: ம. குமாரண்டி; செயலாளர்: இரா. சமையன்; துணைச் செயலாளர்: ச. முத்துகருப்பன்; பொருளாளர்: மு. வெள்ளைச்சாமி; வட்டப் பிரதிநிதி: அ. நாகப்பன்; மற்றும் 9 பேர் செயற்குழுவினர்.

ரொம்பப் பெரிதும் அல்ல ரொம்பச் சிறிதும் அல்ல



1½ டன் ஏடை சாமான் ஏற்றும்

பார்கோ D-300

சிறிய வண்டிகளிலே பெரிது; பெரிய வண்டிகளின் உறைப்பு. கருங்கச் சொன்னால் நடுத்தரமான நல்ல வண்டி பார்கோ D-300. அதிக சாமான்களை ஏற்றிச் செல்ல அடக்கமான வண்டி பார்கோ D-300. சமவெளியில் சங்கடமில்லாமல் ஓட்டவும் பேசுக்கு வரத்து நெரிசலைச் சுலபமாகச் சமாளிக்கவும் பொருத்தமான வண்டி பார்கோ D-300. மீக அடக்கமான, டெலிவரான. சமீட்டிலுள் வாகன், ஆம்புலன்ஸ் ஆகிய எந்த விதத்திலும் உபயோகிக்கலாம். நகரத்திலும் அதன் சுற்றுப்புறங்களிலும் ஆட்களையும் சாமான்களையும் குறைந்த செலவில் ஏற்றிச் செல்ல. இணையற்ற வண்டி பார்கோ D-300

சக்தி மிக்க 28.35 H.P. பெட்ரோல் என்ஜின் • 3,112 மீ.மீ. (123") WB அல்லது 3,336 மிமி (133") WB ஆகிய இரண்டில் விருப்பமான ஒன்றைத் தேர்ந்தெடுக்கலாம் • சுலபமாகவும் விரைவிலும் ரிப்பேர் செய்ய பானெட் திறப்பு வசதி.

• (ரிமியர் ஆட்டோமோபைல்ஸ் தயாரிப்பு)

தவணை ஏற்பாடு

சுந்தரம் பைனான்ஸ் லிமிடெட் மூலம் சுலபமான மாதத் தவணைகளில் வாங்கலாம்.



முழு விவரங்களுக்கு அன்புகூர்ந்து அறிய :

டி. வி. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ் பிரைவேட் லிமிடெட் மதுரை - திருச்சி - திருநெல்வேலி - புதுக்கோட்டை - சேலம் - சேலஞ்சூர் - திருவனந்தபுரம், சப் டிலர்கள்: P. N. கிருஷ்ண அய்யர் & சன்ஸ் பிரைவேட் லிமிடெட், திருச்சி - C. C. ஆட்டோமோபைல்ஸ் லிமிடெட், கள்ளிக்கோட்டை - திருவேலன் ஆட்டோமோபைல்ஸ் லிமிடெட், கொல்லம் - மலேரத்சன் காக்கூலி & சன்ஸ் பிரைவேட் லிமிடெட், புதுச்சேரி.

சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட் மதராஸ் - பங்களூர் - கொத்தாபாத் (A.P.) சம்பல்பூர்; காரமி காராஜ் 1950, விஜயவாடா • ஸ்ரீ பட்டாபிராம் கார்ஷில்ஸ் சிண்டிகேட், காக்கிநாடா, விசாகப்பட்டினம் - D. S. ஆட்டோமோபைல்ஸ், தெலுங்கு - தி மோட்டார் சேல்ஸ் கம்பெனி, அனந்தபுரி காந்து • T. N. ரகுநாத ரெட்டி, டம்பை - ஸ்ரீ வெங்டேஸ்வரா ஆட்டோமோபைல்ஸ், நோல்லூர் - P. V. பஸ் & வின்னி ஸ்டோர்ஸ், செர்லாரா

tl-4272

'மத்திய அரசின் செயல் மாநில அரசை அவமதிப்பதாகாதா?'

'தமிழகத்தில் ஏன் மத்தியப் போலீசுப் படை?'

'உடனடியாகத் திரும்பப் பெறுங்கள்'---குடியரசுத் தலைவருக்கு நாடாளுமன்றக் கழக உறுப்பினர் கோரிக்கை

கோவை, பிப். 5—

தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் மத்திய அரசின் நிசர்வ் போலீசு நிறுத்திவைக்கப்பட்டிருப்பதை நாடாளுமன்ற தி.மு.க. உறுப்பினர் திரு. சி. டி. தண்டபாணி வன்மையாகக் கண்டித்தார்.

"மொழிப் பிரச்சினை காரணமாகத் தமிழக மக்கள் உணர்ச்சிவயப்பட்டிருக்கும் இந்த நேரத்தில், இது போன்ற போலீசுப் படைகளே நிறுத்திவைப்பதால், தமிழக மக்களிடையே பெருத்த சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது"

என்று, இக்கியக் குடியரசுத் தலைவருக்கும், 'தலைமையமைச்சருக்கும் உள்துறையமைச்சருக்கும், திரு. தண்டபாணி தந்தி அனுப்பியுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்ட தாவது:—

"இக்கப் போலீசுப் படைகளை மத்திய அரசு உடனடியாகத் திரும்பப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

"மாநில அரசின் கீழ் உள்ள காவல்துறையினர் சட்ட மும் ஒழுங்கும் சரிவர பாது காக்கப்படவில்லை என்பதை மறைமுகமாக எடுத்துக்காட்டு சின்ற நிலையில்தான் மத்திய அரசின் செய்கை இருக்கிறது.

"மத்திய அரசின் இந்தச் செயல் மாநில அரசை அவமதிக்கின்ற நிலையில் இருக்கிறது."

இண்டாவது உலகத் தமிழ் மாநாடு

நன்கொடை மொத்த வசூல்--செலவுகள் விவரம்

சென்னை, பிப். 4—

சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டிற்குப் பொதுமக்களிட மிருந்து நன்கொடையாகப் பெறப் பட்ட தொகை மொத்தம் சுமார் ரூ. 21 இலட்சமாகும்; இதில் சுமார் ரூ 8 இலட்சம், நீதவத் திலேயே நடைபெற்ற பும்பார் மாநாடு—கார்வைபம்—பொருட் காட்சி—சிறப்பு மலர் முதலியவற் காகச் செலவிடப்பட்டது.

மீதி சுமார் 18 இலட்சத்தில் தமிழகத்திலுள்ள மூன்று பல்கலைக் கழகங்களிலும் திருக்குறள் ஆராய்ச்சித்துறை கிறுவ ரூ. 9 இலட்சம் வழங்கப்பட்டது.

அதுபோக, தற்சமயம் மீதம் உள்ள தொகை சுமார் ரூ. 4 இலட்சமாகும்.

இரு மொழிக் கொள்கையே...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

வருகின்றன; இந்தச் சிக்கல் லிருந்து தப்பிக்க ஒரே வழி, 'மத் திய அரசு மேல்கழச் சேர வியும்படி ஒவ்வொருவரும், இந்தி —ஆங்கில இரண்டிலும் ஓர் ளவு தீறமை பெற்றிருக்க வேண்டும்' என பிரச்சினை விதிப் படுகின்ற.

"பல்கலைக் கழகங்கள், தொழில் நட்ப நிறுவனங்கள் ஆகியவற் றில் ஆங்கிலத்தை அடியோடு நீக்கவது தற்கொலைக்கு ஒப் பானதாகும்."

'இந்தி பேசாத பகுதி மக்கள்மீது இந்தியைத் திணிப்பது தவருனது'

'நாடாளுமன்றத்தில் நிறைவேறிய தீர்மானம் எவருக்கும் மனநிறைவை அளிக்காது'

தமிழகத்திற்கு வந்த சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர் கூறுகிரர்

சென்னை, பிப். 5—

"இரு மொழித் திட்டத்தை அமு லாக்கும் வகையில் தமிழகச் சட்டமன்றம் நிறை வேற்றியுள்ள தீர்மானத்தில் தவறு எதுவுமில்லை.

"மும்மொழித் திட்டம், ஓர் ஏமாற்றத் திட்டமாகும்; நாங் கள் எப்போதும், இருமொழித் திட்டத்தையே ஆதரித்து வரு கிறோம்"

என்று தமிழகத்தில் சுற்றுப்பய ணம் செய்ய வந்திருக்கும் சோஷ லிஸ்டுக் கட்சித் தலைவர் மது லிமாயி, செய்தியாளர்களிடம் குறிப்பிட்டுள்ளார். அவர் மேலும் கூறியிருப்பதாவது :—

"நாடாளுமன்றத்தில் நிறை வேற்றப்பட்டுள்ள ஆட்சி மொழிச் சட்டம், எந்தத் தரப்பினருக்கும் திருப்தி அளிப்பதாக இல்லை; இந் தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்ப தற்கு ஒரு வட்டமேசை மாநாடு கூட்டப்பட வேண்டும் என்ற எனது கருத்தை மீண்டும் வலி யுறுத்துகிறேன்.

அரசியல் சட்டத்தின் 8-வது பிரி வில் உள்ள 14 மொழிகளில் ஏதா வது இரு மொழிகளை ஒவ்வொரு மாகிலத்திலும் கற்றுக்கொடுக்க ஏற்பாடு செய்யலாம்.

இந்தியை, இந்தி பேசாத மக்க ளின்மீது திணிப்பது கண்டிக்கத் தகுந்தது. இந்தியை விரும்பாதவர் கள், அவர்களது தாய்மொழியை யும் ஆங்கிலத்தையும் கற்றுக் கொள்வதற்குக் தடை இருக்கக் கூடாது. இதேபோல், ஆங்கி லத்தை விரும்பாதவர்கள்மீதும் ஆங்கிலத்தைத் திணிக்கக் கூடாது.

மொழிப் பிரச்சினையில் தீர்வு காண வேண்டுமானால், இந்தி பேசும் மாகில மக்கள் இந்தியை ஆட்சி மொழியாகவும், இந்தி பேசாத மாகில மக்கள் ஆங்கி லத்தை ஆட்சிமொழியாகவும் ஏற்றுக்கொள்ள அமுமதி தர வேண்டும்.

இன்னும் இருபது ஆண்டுகளுக் குப் பிறகு யாருக்கு அதிக நன்மை கிடைக்கும் என்பதை ஆராய்ந்து, நன்மை கிடைக்கும் பிரிவை — அடுத்த பிரிவைச் சேர்ந்தவர்கள் விரும்பி ஏற்றுக் கொள்வார்கள்; இதன் மூலம் எல்லோருக்கும் பொதுவான மொழிக் கொள்கை ஒன்றை உருவாக்க முடியும்.

புதிதாக நிறைவேற்றப்பட்ட ஆட்சி மொழிச் சட்டத்தால் இந்தி பேசாத மக்கள் மீதுள்ள பலவகைக் குறைக்க மத்திய அரசு ஏற்பாடு செய்ய வேண்டும். மத்திய அரசு வேலைகளில் ஒரு குறிப்பிட்ட பகுதிகளை இந்தி பேசாத பகுதிளிலேயுள்ள வர்களுக்கு ஒதுக்கி வைப்பதன் மூலம் இந்த நிலை செய்ய முடியும் என்று கருதுகிறேன்."

பல்கலைக் கழகத்தின் முடிவு மாற்றம்!

சட்ட நுணுக்கத்தின் விளைவு!

நாகபுரி, பிப். 5—

நாகபுரி பல்கலைக் கழக மாண வர்களுக்குச் சென்ற மாதத்தில் வழங்கப்பட்ட மாரத்தில் பட்டங் களைத் திருப்பி அனுப்பும்படி பல் கலைக் கழகம் கேட்டுக்கொண் டிருக்கிறது.

அந்தப் பட்டங்களுக்குப் பதில் ஆங்கிலத்தில் புதிய பட்டங்கள் வழங்கப்படுமெனத் தெரிகிறது.

நாகபுரி பல்கலைக் கழக நிர் வாகக் குழு, இவ்வாண்டில் மாரத்தி மொழியில் பட்டங்களை வழங்குவதென முன்பே தீர்மானித் திருந்தது; அதற்கேற்ப மாரத்தி யில் அச்சடித்த பட்டங்கள் மாண வர்களுக்கு வழங்கப்பட்டன.

ஆனால் மாரத்தியில் பட்டங்கள் தருவதால் எழுக்கிய சட்ட நுணுக்கத் தடங்களைத் தவிர்க்கும் பொருட்டு பழைய முடிவை பல் கலைக் கழகக் குழு மாற்றியது!

மைசூர் கல்லூரிகள்

பிப். 12-ம் நாள் திறக்கப்படும்

கல்லூரி முதல்வர்கள் முடிவு

மைசூர், பிப். 5—

மைசூர் நகரத்திலுள்ள எல் லாக் கல்லூரிகளும் பிப்ரவரி 12-ந்தேதி திறக்கப்படும்.

பல்கலைக்கழகத் தினவேந்தர் தலைமையில் கூடிய கல்லூரி முதல் வர்கள் கூட்டத்தில் மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது.

மாணவர்களின் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி காரணமாக கடந்த கிழமை எல்லாக் கல்லூரிகளும் மூடப்பட்டன.

தொடர்ந்து கல்லூரிகள் மூடப் பட்டிருப்பதால் மாணவர்களுக்கு ஏற்படும் பாதகங்கள் குறித்தும் கல்லூரி முதல்வர்கள் கூட்டத்தில் கருத்து தெரிவிக்கப்பட்டது.

பெங்களூர் பல்கலைக்கழகத்தின் கீழுள்ள எல்லாக் கல்லூரிகளும் மூடப்பட்டிருக்கின்றன. இப்பல் கலைக்கழகத்திலுள்ள கல்லூரிகளை எப்போது திறப்பது என்பது பற்றி இன்னும் முடிவு செய்யப்படவில்லை எனவும் தெரிகிறது.

டெல்லியைக் 'கலக்கிய' தமிழக அரசின் முடிவு

இந்திராவையும் இந்திவெறியரையும் பேச்சிமுச்சில்லாமல் செய்துவிட்டது

'முடிந்துவிட்ட' விஷயத்தை மறுபரிசிலனை செய்ய காங்கிரசு மூலவர் காட்டிய மும்முரம்!

'மித்திரன்' இதழின் டில்லி அரசியல் நிருபர் திரு. கி. கஸ்தூரி ரங்கன், காங்கிரசுக் கட்சி அமைப்புக்குள் நிலவியைமைச்சர் இந்திராவின் கரம் தாழ்ந்துவிட்டிருப்பதாகக் குறிப்பிட்டு எழுதி யுள்ள செய்தி மடலில் பின்வருமாறு கூறப்படுகிறது :—

"சென்ற சனவரி 19-ந் தேதி இரண்டாண்டு பதவி பூர்த்தி செய்த சமயத்தில், தலைமை யமைச்சர் இந்திரா செய்த சாத னைகள் எவை என்பதைப் படிப்பவரை அருமையை விளம் பர அதிகாரிகள் வெளியிட்ட னர்; ஒரு பத்திரிகைகூட அதைச் சட்டை செய்யவில்லை; மாருகு நாடு வந்த வகையான பொருளாதார அபாயத்தில் சிக்கியிருக்கிறது என்பதைக் காட்டும் வகையில் பல கட் டுரைகள் தொடர்ந்து வெளி யாகிக் கொண்டிருக்கின்றன.

'காம் ஒரு தம்பரே இல்லியே' என்ற சக்தேவும் இந்திராவுக்குத் தோன்ற ஆரம்பித்துவிட்டது!

இச்சமயத்தில், சென்னியில் அண்ணுவினுள் துணிச்ச லான காரியமும் அவரை வெருட்டியிருக்கிறது!

இந்தியைத் தமிழ் நாட்டிலிருந்து விரட்டவும், என்.சி. போன்ற தேசிய விரோதங்களோடு 'இந்தி எதிர்ப்பு' என்ற பெயரில் இன்னும் நெருக்கத்தில் வந்தால் தமிழ்நாடே பிரிந்து போகும் என்ற மனநிலையான நாக்கத்தை இந்திராவை மட்டுமல்ல—மற்ற இந்தி சார்பு நிலவரினையும் பேச முச்சற்ற நிலவர்களாக ஆக்கிவிட்டன!

இதுவரையில், 'தமிழ்நாடு ஒன்று தான் இந்தியை எதிர்க்கிறது; மற்ற மாகிலங்களெல்லாம் ஒப் புக்கொண்டுவிட்டன' என்று மெருகு பூச்சுப் பேச்செல்லாம் ஆந்திராவிலும் மைருரிலும் நடக்கும் அடிதடி, துப்பாக்கிச் சூடுக் கலவரங்களால் எடுபட மற் போய்விட்டன!

இச்சமயத்திதான், 'கிண்கிண்' என்று காங்கிரசு மூலவர்கள் காரியக் கமிட்டிக் கூட்டத்தில் வந்து உட்கார்ந்துகொண்டு, 'மொழிக் கொள்கையை மறு படியும் பரிசீலிப்போம்' என்று ஆரமித்தனர்; 'இது முடிந்து போன விஷயம்' என்று முன்பு சொல்லிக் கொண்டிருந்த இந் திரா, இப்போது, இது வந்த புதுத்தலுக்கு இணங்காமல் இருக்கமுடியவில்லை!

மொழிப் பிரச்சினையில் அரசாங் கக் கொள்கையைத் தட்டிக் கேட்க ஏற்பட்ட காங்கிரசுக் கட்சித் தலைவர்கள், இப்போது ஒவ்வொரு கொள்கையாகப் பரிசீலிக்க ஆரம்பிக்கும் கூடும். இந்திரா ஒவ்வொருக்கும் பதில் சொல்லிக்கொண்டு, தன் மற் களுக்கும் தடுமாற்றங்களுக்கும் விளக்கம் சொல்லவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது!

இப்போது, 'கட்சியே ஆட்சியை விட முக்கியமானது' என்ற கிலை முதல் தலைவராக உருவாகிக் கொண்டிருக்கிறது!

பிரதமரும், 'ஜனதிபதியைப் போல் எட்டரின் கைப் பொம் மையே' என்றும் உணர்த்தப் பட்டு வருகிறது.

தொழிலாளர் வைப்பு நிதி

வட்டி விகிதம் உயருகிறது

புதுடில்லி, பிப். 5—

தொழிலாளர்களுக்கான பிராவி டண்டு (வைப்பு) நிதிச் சட்டத்தின் வரம்பிற்குள் 112 தொழில் துறை கள் கொண்டுவரப்பட்டிருக்கின் றன.

சென்ற ஆண்டு அக்டோபர் திங்கள் இறுதியை 40,000-த்திற் கும் அதிகமான தொழில் நிறு வனங்கள் இச்சட்டத்தின் வரம்பிற் குள் வந்திருக்கின்றன.

இச்சட்டத்தின் பயன்கள் சுமார் 51 இலட்சம் ஊழியர்கள் அனு பவித்து வருகிறார்கள்.

சென்ற ஆண்டு செப்டம்பர் மாதத்திய நிலவரப்படி, பிராவி டண்டு நிதிக்காக ரூ. 1,017 கோடி வசூலிக்கப்பட்டது; இதில் ரூ. 038 கோடி பத்திரங்களில் முதலீடு செய்யப்பட்டது.

பிராவிடண்டு நிதியில் இருக்கும் தொகைக்கான வட்டி விகிதத்தை 1968—69-ல் 5.25 சதவிகிதமாக உயர்த்தவேண்டும் என்பதாகிய செய்தி, தொழிலாளர் பிராவி டண்டு நிதிக்கான பொறுப்பாளர் களின் மத்திய போர்டு முடிவு செய் திருக்கிறது.

1967—68-ல் அறிவிக்கப்பட்ட வட்டி விகிதத்தைவிட உதிதேசிக் கப்பட்டிருக்கும் வட்டி விகிதம் 0.25 சதவிகிதம் அதிகமாகும்.

நாளிட முன்னேற்றக் கழகத்தினரை, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.எல்., அவர்களை அறிமுகமாகும், கொலிவியா ராகவும், அகில்வியாராகவும் கொண்டு, வரும் அக்கடிதில் (24, முர்ரேஸ்ராம் ஸை செட்டித் தெரு, சென்னை-1) அன்பு வேலில்லிருக்கிறது.